செய்தி குறிப்பு எண்: 52 நாள் .30.5.2008

# பயறு வகைகள், கோதுமை இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர்களுக்கு இருப்புக் கட்டுப்பாடு ஆணை பொருந்தாது

## மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு விளக்கம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 19.04.2008 அன்று விலைவாசி உயர்வு குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக உயர் அலுவலர்களுடன் விவாதித்துப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையிட்டார்கள். அந்த ஆணையின் அடிப்படை.யில் இன்றியமையாப் பண்டங்கள் சட்டம், 1955–ன் கீழ் அத்தியாவசியப் பொருள்களை இருப்பு வைத்திட பல்வேறு இருப்புக் கட்டுப்பாட்டு ஆணைகளை (Control Orders) பிறப்பிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. கோதுமை மற்றும் பயறு வகைகள் ஆகியவற்றை மொத்த வணிகர்களும், சில்லறை வணிகர்களும் இருப்பு வைக்க உச்சவரம்பு நிர்ணயித்து ஏற்கனவே ஆணை வெளியிடப்பட்டுள்ளது.**

**இதன்படி, மாநகராட்சிப் பகுதிகளில் பயறு வகைகளில் மொத்த விற்பனையாளர்கள் 2500 குவிண்டால் அளவுக்கும், சில்லறை விற்பனையாளர்கள் 62.50 குவிண்டால் அளவுக்கும், கோதுமையைப் பொறுத்தவரை மொத்த விற்பனையாளர்கள் 1000 குவிண்டால் வரையிலும், சில்லறை விற்பனையாளர்கள் 31.25 குவிண்டால் வரையிலும் இருப்பு வைக்கலாம் என்றும், மாவட்ட தலைமையிடங்களில் பயறு வகைகளில் மொத்த விற்பனையாளர்கள் 1250 குவிண்டால் அளவுக்கும், சில்லறை விற்பனையாளர்கள் 50 குவிண்டால் அளவுக்கும், கோதுமையைப் பொறுத்தவரை மொத்த விற்பனையாளர்கள் 750 குவிண்டால் வரையிலும், சில்லறை விற்பனையாளர்கள் 18.25 குவிண்டால் வரையிலும் இருப்பு வைக்கலாம். ஏனைய இடங்கள் அனைத்திலும் பயறு வகைகளில் மொத்த விற்பனையாளர்கள் 1250 குவிண்டால் அளவுக்கும், சில்லறை விற்பனையாளர்கள் 50 குவிண்டால் அளவுக்கும், கோதுமையைப் பொறுத்தவரை மொத்த விற்பனையாளர்கள் 437.50 குவிண்டால் வரையிலும், சில்லறை விற்பனையாளர்கள் 12.50 குவிண்டால் வரையிலும் இருப்பு வைக்கலாம் என்றும் இருப்பு உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

**அத்தியாவசியப் பொருள்களின் பதுக்கலைத் தடுக்கவே இருப்பு கட்டுப்பாட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எனினும், இறக்குமதி மூலம் இருப்பினை அதிகரித்தால்தான் வெளிச்சந்தை விலையைக் கட்டுப்படுத்த இயலும். இதை கருத்தில் கொண்டு இருப்பு கட்டுப்பாட்டு ஆணைகள், கோதுமை மற்றும் பயறு வகைகளை இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர்களுக்கு பொருந்தாது என இந்த கட்டுப்பாட்டு ஆணைகளிலேயே தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும், அதனால் வெளிநாட்டிலிருந்து இப்பொருட்களை இறக்குமதி செய்பவர்கள் இருப்பு வைத்துக் கொள்வதில் எந்த இடையூறும் இல்லை எனவும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு தெளிவுபடுத்தியுள்ளார்.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9